இஸ்லாம் மாதிரி வினாத்தாள் - 2

සියලුම හිමිකම් ඇවිරිණි /முழுப் பதிப்புரிமை உடையது./All Rights Reserved

අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන සහ වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு
Ministry of Education, Higher Education and Vocational Education

NEW

අ.පො.ස. (සා.පෙළ.) පෙරහුරු ආදර්ශ ප්‍රශ්න පත්‍රය - 2026

கா.பொ.த. (சா/த) முன்னோடி மாதிரி வினாப்பதிரம் - 2026

G. C. E. (O / L) Pre-Model Paper -2026

இஸ்லாம்	16	T	1	1 மணித்தியாலம்

அறிவுறுத்தல்கள்:

- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக
- 1 – 40 வரையுளள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1),(2),(3),(4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான அல்லது மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவு செய்க
- **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்குமுரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.**
- அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக

1. அல்லாஹ்வின் பெயர்களில் 'செல்வந்தனாக்குபவன்' என்பதனை குறிக்கும் பெயர் யாது?
   (1) அல் மூ.ீனீ (2) அல் மு.ீதீ (3) அல் வதூத் (4) அல் கப்பார்

2. புலன்களுக்கு அப்பாற்பட்ட அம்சங்களை குறித்து நிற்கும் அகீதா பகுதி. யாது?
   (1) இலாஹிய்யாத் (2) நுபுவ்வாத் (3) ஸம்இய்யாத் (4) ரூஹானிய்யாத்

3. எந்த ஓர் அமலும் அல்லாஹ்விடம் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு முதல் அடிப்படையாய் அமைவது யாது?
   (1) தௌபா (2) தக்வா (3) இக்லாஸ் (4) இஹ்ஸான்

4. நோயாளிகளை தடவி சுகப்படுத்தும் அற்புதம் வழங்கப்பட்ட நபி, யார்?
   (1) மூஸா (அலை) (2) ஈஸா (அலை) (3) இப்ராஹீம் (அலை) (4) முஹம்மத் (ஸல்)

5. தயம்முமுடைய உறுப்புக்கள் மாத்திரம் கொண்ட தொகுதி யாது?
   (1) முகமும் இரு கைகளும் (2) முகமும் இரு கால்களும்
   (3) முகம் மாத்திரம், (4). முகமும் இரு காதுகளும்

6. தர்தீபுந்நுஸூல் என்பது யாது?
   (1) அல்குர்ஆன் பாதுகாக்கப்பட்ட முறை (2) அல்குர்ஆன் எழுதப்பட்ட முறை
   (3) அல்குர்ஆன் இறங்கிய ஒழுங்கு முறை (4) அல்குர்ஆன் ஓதப்படும் முறை

7. பிக்ஹுல் அவ்லவிய்யாத் என்பது யாது?
   (1) ஆரம்ப கால இஸ்லாமிய சட்டங்கள் (2) முதன்மைப் படுத்த வேண்டியவை பற்றிய சட்ட நோக்கு
   (3) இஸ்லாமிய சட்டத்தின் ஆரம்ப வழிமுறை (4) பிற்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள் பற்றிய ஆய்வு

8. இப்ராஹீம் (அலை) அவர்கள் நெருப்பில் எறியப்பட்ட போது கூறிய வார்த்தை யாது?
   (1) இன்னல்லாஹ மஅனா (2) யா நாரு கூனீ பர்தன் வஸலாமன்
   (3) பிஸ்மில்லாஹி தவக்கல்து அலல்லாஹ் (4) ஹஸ்பியல்லாஹு வனி.ீமல் வகீல்

Past Papers Wiki

9. நபித்தோழர்கள் உம்ராவை நிறைவேற்றச் சென்ற இடத்தில் எதிர்பார்க்காத நிலையில் போராட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்ட போது மனம் தளராமல் அதை ஏற்று நபி (ஸல்) அவர்களுடன் செய்துகொண்ட உடன்படிக்கை யாது?
(1) பைஅதுர் ரிழ்வான் (2) மதீனா சாசனம்
(3) பைஅதுல் ஹுதைபிய்யா (4) பைஅதுல் அகபா 2

10. 'ஒவ்வொன்றினதும் இன்பம் அதற்குரிய இயல்பிலேயே தங்கியுள்ளது. உள்ளத்தின் இன்பம் அல்லாஹ்வை அறிவதில் உள்ளது.'அல்லாஹ்வை அறிதல் என்பது,
(1) தவக்குல் (2) ஸப்ரு (3) ரிழா (4) ம.்.ரிபத்

11. ஜாஹிலிய்யா கால மக்கள் கோத்திர அமைப்பில் தமது வாழ்க்கையை அமைத்துக் கொண்டமைக்கான பிரதான காரணம் யாது?
(1) யுத்தங்களும் அவற்றன் பாதுகாப்பு ஏற்பாடுகளும் (2) மிகையான வளமும், குறைவான தேவையும்
(3) அரிதான வளமும், நிறைவான தேவையும் (4) வியாபாரமும் அதில் பலம் பெறவும்

12. அல்குர்ஆனுக்கு முன் தனது இயலாமையை ஒத்துக்கொண்டு கவிபாடுவதனையே நிறுத்திக்கொண்ட அரபுக் கவிஞர் யார்?
(1) லபீத் (2) வலீத் (3) ஸமக்ஷரி (4) இம்ரஉல் கைஸ்

13. சிசு உருவாக்கம் பற்றிய அல்குர்ஆனின் கருத்தை ஆய்வு செய்து உறுதிப்படுத்திய அறிஞர் யார்?
(1) ஜேம்ஸ் ஜீன்ஸ் (2) ஓராபி பாஷா (3) அப்துல்லாஹ் பாதீப் (4) பேராசிரியர் கீத்மோர்

14. ஹிஜ்ரி முதல் நூற்றாண்டில் முதலில் ஹதீஸ்களைத் திரட்டும் பணியில் ஈடுபட்டவர் யார்?
(1) இமாம் அஹ்மத் பின் ஹன்பல் (ரழி) (2) இமாம் மாலிக் (ரழி)
(3) உமர் பின் அப்துல் அஸீஸ் (ரஹ்) (4) ஷிஹாபுத்தீன் ஸுஹ்ரி (ரஹ்)

15. பின்வரும் அட்டவணையில் "அ" ஹதீஸ் துறை அறிஞர்களின் பெயர்களும் "ஆ" நிரலில் அவர்கள் தொகுத்த ஹதீஸ் நூல்களும் தரப்பட்டுள்ளன.

அ	ஆ
1. முஸ்லிம் பின் ஹஜ்ஜாஜ்	A. அபூதாவுத்
2. ஸுலைமான் பின் அஷ்அஷ்	B. ஸுனன் முஸ்லிம்
3. அஹ்மத் பின் நஸாஈ	C. ஸஹீஹ் புஹாரி
4. முஹம்மத் பின் இஸ்மாஈல்	D. ஸுனன் நஸாஈ

மேலே "அ" நிரலில் உள்ளவற்றை "ஆ" நிரலில் உளளவற்றுடன் ஒழுங்கு படுத்தும் போது உருவாகும் சரயான சேர்மானத் தொகுதி யாது?
(1) ABCD (2) BCDA (3) BADC (4) BDCA

16. யுத்த நேரத்தில் தொழும் தொழுகைக்கான முறை எவ்வாறு அழைக்கப்படும்?
(1) ஸலாதுல் கவ்.்ப் (2) ஸலாதுல் இஸ்திஸ்கா (3) ஸலாதுல் ஹாஜா (4) ஸலாதுல் குஸூ.்ப்

17. சூரா பாத்திஹாவை ஓதுவதற்கு முன் ஆரம்பத் தக்பீர் கட்டியதும் ஓதும் துஆ எவ்வாறு அழைக்கப்படுகிறது?
(1) துஆஉல் இப்திதாஹ் (2) தக்பீர் தஹ்ரீமா (3) இஸ்தி.்பார் (4) அத்தஹிய்யாத்

18. ஹஸன் சாதாரண தரப் பரீட்சைக்குப் பின்னர் வணிகத்துறைக்கு செல்வதா? கலைத்துறைக்கு செல்வதா? என சங்கடத்தில் இருந்த போது அவனுக்கு 2 ரக்அத்கள் தொழுது பிரார்த்திக்குமாறு வழிகாட்டப்பட்டது. அவ்வாறு வழிகாட்டப்படும் தொழுகை
(1) ஸலாதுல் ஹாஜத் (2) ஸலாதுல் லுஹா (3) ஸலாதுல் இஷ்ராக் (4) ஸலாதுல் இஸ்திகாரா

19. 'லாஇலாஹ இல்லல்லாஹ்' என்பதனை குறிக்கும் அரபுப் பதம் யாது?
(1) தக்பீர் (2) தஹ்மீத் (3) தஹ்லீல் (4) தஸ்பீஹ்

20. பின்வரும் அட்டவணையில் ஒரு பகுதியில் சில அரபுச் சொற்களும் அடுத்த பகுதியில் அதன் தமிழ் வடிவமும் தரப்பட்டுள்ளன.

அரபுச் சொற்கள்	**தமிழ் வடிவம்**
1. இஜாரா	A. இலாபம் பகிரங்கமான விற்பனை
2. முராபஹா	B. வாடகைக் கொள்வனவு
3. ரஹ்ன்	C. பரோபகாரக் கடன்
4. கர்ளுள் ஹஸன்	D. அடகு

மேற்குறித்த அரபுச் சொற்களுக்கு ஏற்ப முறையே அதன் பொருளை ஒழுங்குபடுத்தினால் அமையும் தெரிவு யாது?

(1) ABCD (2) BADC (3) CBAD (4) DCBA

21. உரத்த குரலில் சப்தமிட்டுப் பேசுவதை அல்குர்ஆன் எதற்கு ஒப்பிடுகின்றது?
(1) கழுதையின் சப்தம் (2) சிங்கத்தின் கர்ஜனை (3) கூக்குரல் (4) ஒப்பாரி

22. "எனது நபித்துவத்துக்கான அடையாளங்களை காண்பிப்பதற்கு எனக்கு சந்தர்ப்பம் அளியுங்கள் எனக் கோருபவனுக்கு சந்தர்ப்பம் அளிப்பவனும் நிராகரித்தவனாவான்" எனக் கூறிய இமாம் யார்?
(1) இமாம் அஹ்மத் (ரஹ்) (2) இமாம் ஷாபி (ரஹ்)
(3) இமாம் மாலிக் (ரஹ்) (4) இமாம் ஆபூஹனீபா (ரஹ்)

23. பின்வரும் அட்டவணையில் "அ" நிரலில் தரப்பட்டுள்ள விடயத்துடன் தொடர்பான அல்குர்ஆன் அத்தியாத்தின் பெயர் "ஆ" நிரலில் தரப்பட்டுள்ளன.

அ	ஆ
1. அரச அத்துமீறலில் இருந்து ஈமானைப் பாதுகாத்துக் கொண்ட வாலிபர்கள் பற்றிய வரலாறு	A. ஸுரா யூஸுப்
2. ஷிர்க்கில் இருந்து மக்களைப் பாதுகாக்க முனைந்த நபி இப்ராஹீமின் வரலாறு	B. ஸுரா பகரா
3. வாலிப வயதில் கற்பொழுக்கம் பேணிய நபியின் வரலாறு	C. ஸுரா அல் கஹ்ப்
4. சமூகத்தை அடிமைத்தலையில் இருந்து விடுவித்த மூஸா நபியின் வரலாறு	D. ஸுரா அ.்.ராப்

மேலே "அ" நிரலில் உள்ளவற்றை "ஆ" நிரலில் உள்ளவற்றுடன் ஒழுங்கு படுத்தும் போது உருவாகும் சரியான சேர்மானத் தொகுதி யாது?

(1) ABCD (2) BACD (3) CDAB (4) BDCA

24. ஒருவர் தனது பயன்பாட்டுக்காக காரொன்றை இஸ்லாமிய வங்கி ஒன்றிடமிருந்து வாடகை ஒப்பந்த அடிப்படையில் பெற்றுக்கொள்கிறார். இவ்வொப்பந்தத்தைக் குறிக்கும் சொல் யாது?
(1) ஸலம் (2) இஜாரா (3) ரஹ்ன் (4) வகாலா

25. காலை 10.45 மணிக்கு கொழும்பிலிருந்து திருகோணமலை வரை பயணத்தை ஆரம்பித்த ஒருவர் ளுஹருடைய தொழுகையை அஸருடன் சேர்த்து கந்தளாய் நகரப் பள்ளியில் தொழுதார். அவர் தொழுத முறை,
(1) ஜம்உத் த.்.கீர் (2) ஜம்உ (3) கஸ்ர் (4) ஜம்உத் தக்தீம்

26. மக்காவில் ஆரம்ப கால முஸ்லிம்களுக்கு ஆன்மீக பயிற்சி வழங்கப்பட்ட இடம் யாது?
(1) தாருல் ஹிக்மா (2) தாருல் நத்வா (3) தாருல் ஈமான் (4) தாருல் அர்கம்

27. மக்காவில் முஸ்லிம்கள் சமூக பகிஷ்கரிப்புக்கு உள்ளாக்கப்பட்டு ஒதுக்கி வைக்கப்பட்ட இடம் யாது?
(1) ஷிஅப் அபீ தாலிப் (2) ஷிஅப் அபீ சு.்.ப்யான் (3) மக்கா முகர்ரமா (4) தாயி.்.ப் கணவாய்

28. ஹஜ்ஜுக்கு சென்ற அஹ்மத் ஹரத்தின் எல்லைக்குள் இருந்த ஒரு செடியை வெட்டினான். இவரது ஹஜ் நிறைவேற வேண்டுமெனில் அவர் நிறைவேற்ற வேண்டிய பரிகாரம் யாது?
(1) கப்பாரா (2) பித்யா (3) ஜிஸ்யா (4) கராஜ்

29. பகுத்தறிவை மையமாகக் கொண்டு தோன்றிய வழிகெட்ட சிந்தனைப் பிரிவு எது?
(1) கதரிய்யா (2) ஜபரிய்யா (3) மு.்.தஸிலா (4) கவாரிஜ்

30. ‘அகிலங்களின் அருட்கொடை’ எனும் கருத்தை தரும் சொல் யாது?
(1) ரப்புல் ஆலமீன் (2) ரஹ்மத்துன் லில் ஆலமீன் (3) காத்தமுன் நபிய்யீன் (4) ரஸூலுன் அமீன்

31. ‘வானவர்கள் வெட்கப்படும் ஒருவருக்கு நான் ஏன் வெட்கப்படக்கூடாது’ என நபி (ஸல்) அவர்களால் சிறப்பித்து கூறப்பட்டவர் யார்?
(1) இப்னு மஸ்ஊத் (ரழி) (2) இப்னு உமர் (ரழி) (3) அலீ (ரழி) (4) உஸ்மான் (ரழி)

32. ‘சீனாவுக்கு இஸ்லாத்தின் தூதானது நபி (ஸல்) அவர்களின் காலத்திலேயே அனுப்பப்பட்டது’ என்று குறிப்பிடும் வரலாற்று ஆசிரியர் யார்?
(1) ஜேம்ஸ் டெனன்ட் (2) ஜேம்ஸ் எமர்ஸன் (3) பிளினி (4) தோமஸ் ஆர்னல்ட்

33. கி.பி 8 ஆம் நூற்றாண்டில் இலங்கையில் வாழ்ந்த அரபு வர்த்தகர்களின் இறந்த விதவை மனைவிகளையும், ஆதரவற்ற பிள்ளைகளையும் அரேபியாவிற்கு அனுப்பிய மன்னன் யார்?
(1) 2 ஆம் தாதோபதிஸ்ஸ (2) பராக்கிரமபாகு (3) 1 ஆம் புவனேகபாகு (4) 2 ஆம் அக்ரபோதி

34. திருமணம் முடித்த கணவன் தன் மனைவக்கு வழங்க வேண்டிய உணவு, உடைச் செலவுகள் முறையே எவவாறு அழைக்கப்படுகறது?
(1) ஈஜாப், கபூல் (2) ஸகன், லியாபா (3) மஹர், வலீமா (4) நபகா, கிஸ்வா

35. பின்வருவனவற்றுள் புலமை சார்ந்த சேவைத் தொழிலுக்கு உதாரணம் யாது?
(1) காரியாலய உதவியாளர் (2) கற்பித்தல் (3) சிற்றூழியம் (4) காவல் பணி

36. இத்தா அனுஷ்டிக்கும் பெண் ஒப்பனைகள், அலங்காரங்களில் இருந்து தவிர்ந்து கொள்ள வேண்டும் என்பதைதக் குறிக்கும் சொல் யாது?
(1) குப்ரா (2) சுக்ரா (3) இஹ்தாத் (4) இல்ஹாத்

37. மக்காக் காலத்தில் நபி (ஸல்) அவர்களுக்கு பக்க பலமாக இருந்த இளைஞர்களுள் இருவர் முறையே
(1) முஸ்அப் (ரழி), அர்க்கம் (ரழி) (2) முஸ்அப் (ரழி), சுமையா (ரழி)
(3) ஸ.்.தி பின் மஆத் (ரழி), அர்க்கம் (ரழி) (4) யாசிர் (ரழி), அர்க்கம் (ரழி)

38. பிறசமயத்தோரை மதித்து அவர்களுடன் நடுநிலையான போக்கை பேணல் போன்றன இஸ்லாமிய போதனைகளாகும். இது
(1) அவ்லவிய்யாத் சார்ந்ததாகும் (2) வஸதிய்யா சரந்ததாகும்
(3) தஸ்கியா சார்ந்ததாகும் (4) இலாஹிய்யாத் சார்ந்ததாகும்.

39. பின்வருவனவற்றுள் அல்லாஹ்வுடன் போர் புரிவதற்கு ஒப்பான பாவமாகக் கருதப்படும் செயல் யாது?
(1) பொய்ச் சத்தியம் (2) பதுக்கல் (3) வட்டி (4) ஏமாற்று

40. தொடர்பாடலுக்காக நபி (ஸல்) அவர்கள் உருவாக்கிய திணைக்களம் எது?
(1) தீவானுல் காதிப் (2) தீவானுல் இன்ஷா (3) தீவானுல் ரஸாஇல் (4) தீவானுல் பரீத்

Past Papers Wiki

இலவச கல்வி அமைச்சு /முழுப் பதிப்புரிமை உடையது./All Rights Reserved

අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන සහ වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு
Ministry of Education, Higher Education and Vocational Education

NEW අ.පො.ස. (සා.පෙළ.) පෙරහුරු ආදර්ශ ප්‍රශ්න පත්‍රය - 2026

கா.பொ.த. (சா/த) முன்னோடி மாதிரி வினாப்பதிரம் - 2026

G. C. E. (O / L) Pre-Model Paper -2026

இஸ்லாம்	16	T	2	2 மணித்தியாலம்

- முதலாம் வினாவையும் வேறு நான்கு வினாக்களையும் தெரிவு செய்து, மொத்தமாக **ஐந்து** வினாக்களுக்க மாத்திரம் விடை எழுதுக.
- முதலாம் வினாவின் விடைக்கு 20 புள்ளிகளும் தெரிவு செய்த ஏனைய ஒவ்வொரு வினாவின் விடைக்கும் 10 புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.

1. சுருக்கமான விடை எழுதுக?

1. நபிமார்களுக்கு வழங்கப்படும் அற்புதம், வலிமார்களுக்கு வழங்கப்படும் விசேட அம்சம் இரண்டினையும் குறிக்கும் பதங்களைத் தருக?
2. தூய அகீதாவைப் பாதுகாத்த இமாம்கள் இருவரது பெயர்களைத் தருக?
3. “ஸாதிகூன், பாஇஸ்ன்“ எனும் வார்த்தைகளால் அல்லாஹ் நபித்தோழர்களை புகழ்ந்துரைத்துள்ளான். இவ்வார்த்தைகளின் கருத்துக்களை எழுதுக?
4. இஜ்மா, கியாஸ் அல்லாத இரு துணை மூலாதாரங்களை குறிப்பிடுக?
5. மக்கா, மதீனா ஆகிய நகரங்களின் பழைய பெயர்களை எழுதுக?
6. விவசாயம் பொருளீட்டலின் ஓர் முறையாகும். அது இருவகைப்படும், அவை எவை?
7. தலாக் பாஇனின் இரண்டு பிரிவுகள் எவை?
8. அறிஞர் சித்திலெப்பையின் ஆன்மீக பக்கத்தை வலுவூட்டக் காரணமாக இருந்த இருவரைக் குறிப்பிடுக?
9. பெற்றோர்களுடன் அன்பாக நடந்துகொள்ள வேண்டும். அவர்களுக்கு அன்பு செலுத்தும் முறைகள் இரண்டு தருக?
10. உடலோடும் உள்ளத்தோடும் தொடர்பான இபாதத்கள் இரண்டு தருக?

2.

1. இமாம், ம.ூம் ஆகிய இரு பதங்களின் பொருளை எழுதுக.
2. ஒருவர் ஈகையில் ஈடுபடும் போது பெற்றுக் கொள்ளும் நன்மைகள் 3 தருக?
3. அல்குர்ஆனை விளங்குவதற்கு ஸுன்னா அவசியமானது எனும் கூற்றை 5 விடயங்களை மையமாகக் கொண்டு விளக்குக?

3.

1. ரீ.பீ ஜாயாவின் சமூகப் பணிகள் இரண்டு தருக?
2. இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்கள் எழுதிய நூல்கள் மூன்று தருக?
3. கலீ.ூபா அலி (ரழி) அவர்களின் பணிகள், பங்களிப்புகள் 5 இனை சுருக்கமாக விளக்குக?

PAST PAPERS WIKI

Past Papers Wiki

4.

1. மனிதன் படைக்கப்பட்டதன் நோக்கம் பற்றி ஓர் அல்குர்ஆன் வசனம் தருக?
2. ஹஜ்ஜிற்கும், உம்ராவிற்கும் இடையிலான இரு வேறுபாடுகளைத் தருக?
3. நோன்பின் மூலம் கிடைக்கும் ஆன்மீகப் பயன்கள் ஐந்தினை விளக்குக?

5.

1. இரவு முழுவதும் நின்று வணங்கி, பகல் முழுவதும் நோன்பு நோற்று வந்த அப்துல்லாஹ் இப்னு அம்ர் (ரழி) அவர்களுக்கு நபிகளார் வழங்கிய உபதேசம் யாது?
2. "ஐந்து நிலை வருமுன் ஐந்து விடயங்களை பேணிக் கொள்ளுங்கள்" என நபி (ஸல்) அவர்கள் கூறிய விடயங்களில் மூன்று விடயங்களை குறிப்பிடுக?
3. "உம்மத்" எனும் கட்டமைப்பை பாதுகாப்பதற்கு வழங்கப்பட்டுள்ள வழிகாட்டல்கள் 5 தினை விளக்குக?

6.

1. இல்ஹாத் எனும் பதத்தின் வரைவிலக்கணத்தை தருக?
2. நபி (ஸல்) அவர்கள் இறுதித் தூதர் என்பதற்குரிய தர்க்கரீதியான சான்றுகள் மூன்று தருக?
3. கழா - கதரை ஏற்றுக்கொள்வதனால் ஏற்படும் நன்மைகளை 5 இனை விளக்குக?

7. **பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக**

1. இளமையில் மேற்கொள்ள வேண்டிய பணிகள்
2. இஸ்லாமிய பொருளாதாரத்தின் சிறப்பம்சங்கள்
3. ஆன்மீகத்தை மேம்படுத்தும் வழிமுறைகள்
4. உஸ்மான் (ரழி) அவர்களின் காலத்தில் அல்குர்ஆன் தொகுக்கப்படல்

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi
Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Papers Library